# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

நில அளவைகள் சபை

இலங்கை நில அளவைகள் சபையானது, நில அளவைகள் மற்றும் நில அளவையாளர்களின் தொழில் சார் நடத்தை என்பவற்றைக் கண்காணிப்பதற்காக 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் மூலம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள பகுதியளவு அரச நிறுவனம் ஒன்றாகும். நில அளவைகள் சபைக்கு உரித்தான பிரதான கடமைப் பொறுப்புக்கள் நில அளவையாளர்களைப் பதிவு செய்தல், வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தி மற்றும் நில அளவைகள் துறைக்குரிய முறைப்பாடுகளை விசாரணை செய்தல் என்பன ஆகும்.

கீழ்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகள் ஆகிய தகைமை பெற்ற நபர்களை இணைத்துக் கொள்வதற்கு சபை எதிர்பார்க்கின்றது.

முகாமைத்துவ உதவியாளர் தரம் III - 03 வெற்றிடங்கள்

**கல்வித் தகைமைகள் :**

(அ) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில்
  i. சிங்களம்/தமிழ்
  ii. கணிதம்
  ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து இருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று பாடங்களில் (பொது அறிவுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்து இருத்தல்.

(இ) கணினிப் பாவனை தொடர்பாக ஆறு (06) மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறி ஒன்றினைக் கற்றிருத்தல்.

**வயது** : 18 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 45 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்புச் செய்யும் வழிமுறை :**

பொது உளச்சார்புப் பரீட்சை மற்றும் பொது அறிவு, மொழித் தேர்ச்சி மற்றும் கணினிப் பரீட்சை ஆகிய மூன்று பாடங்களில் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை ஒன்றினதும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

**மாதாந்த சம்பள அளவுத் திட்டம்** : (MA-1-1) - ரூபா 27,910 - 10×300 - 7 × 350 - 4 ×495 - 20 660 - ரூபா 48,540.00

**ஏனைய பயன்தொகைகள் :**

(1) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான உரிமைகள்
(2) இடர் கடன்
(3) விழா முற்பணம்
(4) அரசினால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் சம நிலையில் உள்ள பகுதியளவு அரச நிறுவனங்களினால் அனுபவிக்கப்படும் ஏனைய பயன்தொகைகள் என்பனவும் உரித்தாகும்.

**விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் முறை:**

www.landsurveycouncil.org எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டு உள்ள நிகழ்நிலை விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்ததன் பின்னர், விண்ணப்பதாரியினால் முன்வைக்கப்பட்ட விபரங்கள் உள்ளடங்கிய PDF படிவத்தில் விண்ணப்பம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்பத்தினை அனுப்பி வைக்கும் முறை:**

அவ்வாறு பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை உறுதிப்படுத்தி, கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இலங்கை வங்கியின் நாராஹேன்பிட்ட கிளையில் “தலைவர், நில அளவைகள் சபை” எனும் பெயரில் உள்ள 0001658239 ஆம் இலக்க கணக்கிற்கு ரூபா 1,200.00 தொகைப் பரீட்சைக் கட்டணத்தை வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் 2024.08.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும். (இந்தக் கட்டணம் எந்த வகையிலும் மீளச் செலுத்தப்படமாட்டாது

என்பது தொடர்பில் கவனம் செலுத்தவும்) விண்ணப்பத்தினை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "முகாமைத்துவ உதவியாளர் பதவிக்காக" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

தலைவர்,
நில அளவைச் சபை.

நில அளவையாளர் நாயக அலுவலகம்,
150, பேர்னாட் சொய்சா மாவத்தை,
கொழும்பு 05.

07-378